<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 56/2022

Deposition of Witness : DW 1

Name : கோபால் (வயது – 62)

Father's Name /W/o : த/பெ பொன்னுசாமி

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : பெருங்களத்தூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 12.09.2025.

## <u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.775 பி.சா.ஆ – 1 என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் சர்வே எண்.234/2 இல் தர்க்காஸ்து பேரில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அடமானம் யார் வைத்தார்கள் என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 2 அடங்கல் வழக்கு எண்.231/88 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழங்கப்பட்டதா அல்லது பின்பு வழங்கப்பட்டதா என்றால் 1988 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. மேற்படி 1988 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளது. எந்த தேதியில் வழங்கப்பட்டது என்று மேற்படி அடங்கலில் குறிப்பிட்டுள்ளது என்றால் 23.08.1988 தேதி குறிப்பிட்டுள்ளது.

2. 1988 ஆம் ஆண்டிற்கு பிறகு என் பெயரிலோ அல்லது என் தகப்பனார் பெயரிலோ தாவா சொத்தில் பயிர் வைத்து வருகிறோம் என்பதற்கு ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

ஞுபாகமில்லை.என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 3 இல் 08.10.1993 தேதியில் சர்வே எண். 187/1 இல் புளியமரத்தின் மீது அரக்கோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாக தெரிவித்து கணேசன் மற்றும் ஆறுமுகம் பெயரை தன் பட்டாவில் சேர்க்க நீதிமன்றம் வழக்கு முடியும் வரை எவ்வித நடவடிக்கை எடுக்ககூடாது என அறிவுறுத்தபடுகிறது என அரக்கோணம் வட்டாட்சியரால் உத்தரவு பிறப்பிக்கபட்டுள்ளதா என்றால் சரிதான்.

3. சர்வே எண்.187/1 இந்த வழக்கில் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 4 இல் என்ன உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் மேற்படி புல எண்களில் பட்டாவை மாற்றம் செய்யகூடாது என்றும் பார்வையில் காணும் நோட்டிஸில் பொன்னுசாமி என்பவர் தகவல் அளித்துள்ளார் எனவே இவ்வழக்கு பைசல் ஆகும் வரை மேற்படி புலன்களில் உரிமையில் எவ்வித மாற்றமும் செய்யகூடாது என்று கிராம நிர்வாக அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது என்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

4. பி.சா.ஆ – 4 கடிதம் யாருக்கு அனுப்பப்பட்டது என்றால் கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பட்டது. இந்த கடிதம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எனக்கும் வழங்கினார்கள். அதில் என் பெயரோ அல்லது என் தகப்பனார் பெயரோ குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை ஆனால் அஞ்சல் மேல் உறையில் என் தந்தை பெயருக்கு தான் வந்தது. என் தந்தை பெயருக்கு வந்த அஞ்சல் மேல் உறையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 6 என்ன உத்தரவு என்றால் ஆங்கிலத்தில் உள்ளதால் எனக்கு படிக்கதெரியவில்லை. மேற்படி உத்தரவு மனுதாரர் வராததால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தெரியாது. நான் எப்போது பட்டா மாற்ம் செய்வதற்கு வட்டாட்சியருக்கு மனு அளித்தேன் என்றால் 2016 சென்னை உயர்நீதிமன்றம் பிற்பபித்த உத்தரவில் பேரில் வட்டடாட்சியரிடம் மனு அளித்தேன். மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டதா

என்றால் மேல்முறையீடு செய்ய சொன்னார்கள். எதற்காக மேல்முறையீடு போக சொன்னார்கள் என்றால் தெரியாது. நான் வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்தேனா என்றால் செய்தேன். அவர் என்ன உத்தரவு பிறப்பித்தார்கள் என்றால் மேல்முறையீடு செய்ய சொன்னார்கள். மனுவை தள்ளுபடி செய்ததால் தான் மேல்முறையீடு செய்ய சொன்னார்கள் என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த மனுவில் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்த போது அங்கு 05.02.2024 அன்று என்ன உத்தரவு பிறப்பித்தார்கள் என்றால் மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணை நடத்திய பிறகு எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை.

6. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 7 இல் 05.02.2024 தேதியில் மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் பத்தி 5 இல் வட்டாட்சியரின் செயல் முறைகள் 05.10.2019 தேதியில் சர்வே எண்.234/2 இல் மொத்த பரப்பு 2 ஏக்கர் 8 செண்ட் நிலத்தில் மனுதாரர் தரப்பில் விற்பனை செய்தது போது மீதமுள்ள ஏக்கர் 1.20 1/4 செண்ட் நிலத்திற்கு உரிமை கோரிய மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக எதிர் மனுதாரர்களால் அரக்கோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.56/2022 மற்றும் அசல் வழக்கு எண்.57/2022 வழக்குகள் தொடரப்பட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளதால் மனுதாரரின் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நீதிமன்றத்தை அனுகக்கோரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

7. சிவகாமி என்பவர் யார் என்றால் என் தாயார். என் தாயாருக்கு நகல் வந்ததா என்றால் சரிதான். மேற்படி மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவு குறித்து மேல்முறையீடு செய்தேனா என்றால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி உத்தரவின் பேரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுளள்து என்றாலும் வழக்கு எண் என்னவென்றால் அசல் வழக்கு எண்.82/2025. எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாகக்ல் செய்துள்ளேன் என்றால் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

8. மேற்படி அசல் வழக்கு எண்.82/2025 மாவட்ட வருவாய் அலுவலல் எதிராக மட்டும் வழக்கு தாக்ல் செய்துள்ளேன் என்றால் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், சார் பதிவாளர், கணேசன் வாரிசுதாரர், ஆறுமுகம் வாரிசுதாரர், தரண் சாய், டில்லி, பாண்டுரங்கன், ஸ்ரீனிவாசன் பெயரில் வழக்கு தாகக்கல் செய்தேன். மேற்படி வழக்கு மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவு ரத்து செய்ய கோரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் கணேசன் மற்றும் ஆறுமுகம் தவறுதலாக வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்ய கோரியும், கணேசன் வாரிசுதாரர் மற்றும் ஆறுமுகம் வாரிசுதாரர் எழுதிய கிரைய ஆவணங்கள் ரத்து செய்ய கோரி தாக்கல் செய்துள்ளேன்.

9. எந்த வருடம் மாற்றம் செய்த பட்டாவை ரத்து செய்யகோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1988 ஆம் ஆண்டு. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 8 வழக்கு எண்.231/1988 தீர்ப்பு என்றால் சரிதான். மேற்படி வழக்கு 30.11.2007 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். பழனி என்பவர் யார் என்றால் என் தம்பி. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் நான், என் தந்தை மற்றும் என் தம்பி சேர்ந்து தனுஷ்கோடி, ராஜா, தாயம்மாள் மெமோரியல் கல்வி அறக்கட்டளை மேலாளர் பாதுகாவலர் டி.ஆர் பாலகிருஷ்ணன் பெயரில் 29.01.2007 தேதியில் சர்வே எண்.234/2ஜி இல் ஏக்கர் 0.95 செண்டில் பொதுவில் ஏக்கர் 0.38 செண்ட் கிரையம் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் இல்லை.

10. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் என் தந்தை புகைப்படம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ஆவணத்தில் என் கையெழுத்து உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ஆவணத்தில் 3 ஆவது கையெழுத்து என் தம்பு கையெழுத்தா என்றால் சரிதான். மேற்படி விற்பனை ஆவணம் வா.சா.ஆ – 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணம் மேல்முறையீடு வழக்கு 7/2015 நிலுவையில் இருந்த போது தான் விற்பனை செய்தோம் என்றால் சரிதான்.

11. மேற்படி ஆவணம் வா.சா.ஆ – 13 95 செண்டில் பொதுவில் ஏக்கர் 0.32 செண்ட் உள்ளது என்றால் சரிதான். எனக்கு 2 ஏக்கர் 8 செண்ட் முழுமையாக பாத்தியப்பட்டிருந்தால் எதற்காக பொதுவில் 0.32 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் யு.டி.ஆர் இல் தவறுதலாக பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது.